புதிய அவையம்
PUTHIYA AVAIYAM
A Peer-reviewed Journal & Bilingual Journal for Arts and Humanities
ज्ञान - विज्ञानं विमुक्तये
UGC Approved Journals
ISSN: 2456-821X
Vol:07, Issue: 02 கட்டுரை ஏற்றுக்கொள்ளப்பட்டது மே 2023 – வெளியிடப்பட்டது ஜூன் 2023
SACRED HEART RESEARCH PUBLICATIONS
June-2023

# தந்தைவழியாட்சி எனும் ஆளும் கருத்தியலைத் தகர்த்தல்

அல்லி. ஆ
முனைவர் பட்ட ஆய்வாளர்
தமிழாய்வுத்துறை
பதிவு எண் : 21113164022023
ஸ்காட் கிறித்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில் – 629003.

முனைவர் ரா.ச.ராஜ ஸ்ரீ
ஆய்வு நெறியாளர்
உதவிப்பேராசிரியர்
தமிழாய்வுத்துறை
ஸ்காட் கிறிஸ்தவக் கல்லூரி (தன்னாட்சி)
நாகர்கோவில் – 629003

## முன்னுரை

தந்தைவழியாட்சி என்னும் கருத்தியல் மானுடவியல் மற்றும் பெண்ணிய கோட்பாட்டாளர்களிடம் வலுவான விவாதப் பொருண்மையாக இருந்து வந்துள்ளது. பெண்ணியக் கோட்பாட்டாளர்கள் தந்தைவழியாட்சி முறையானது அதற்கு முன்னிருந்த பெண்பால் வினைபாட்டை எவ்வாறு கீழிறக்கம் செய்து தன்னை நிலைப்படுத்திக் கொண்டது என்னும் சாத்தியக்கூறுகளை ஆராய்கின்றனர். தந்தைவழி சமூகம் கட்டமைத்துள்ள ஆண்மை/பெண்மை என்ற பதங்களில் ஆண்பால் எப்போதும் ஆளுகின்ற பாலாக இருந்து, ஆளப்படும் பெண்பாலின் மீது அதிகாரத்தை பராமரிக்க முயல்கிறது. இதற்காக தகுதி, மனோபாவம், வகிபாவம் போன்ற சமூகத் தனித்துவங்களை இருபாலருக்கும் வகைப்படுத்தி உலவவிட்டுப் பின் அவற்றின் ஊடாக ஆண்பாலில் இயற்கையாகவே ஆளுமை உள்ளார்ந்து கிடக்கிறது என்றும் இத்தகைய தனித்துவங்களை மறுக்கும் பெண் அல்லது ஆணை பெண்மையற்றவள் அல்லது ஆண்மையற்றவன் என்றும் அடையாளப்படுத்துகிறது. இதற்கு மறுதலையாக பெண்ணிய கோட்பாட்டாளர்கள் தந்தை வழிச்சமூகம் பெண்களை அவர்கள் உருவாக்கிய ஒரே வகைமாதிரிக்குள் ஒடுக்க முயல்கிறது மட்டுமன்றி அவை தனிமனித வேறுபாடுகளை கணக்கில் கொள்ளாமல் பெண்ணை ஒட்டுமொத்தமாக ‘பெண்மை’ என வரையறுக்கிறது என்று தந்தை வழியாட்சியின் ஆதிக்க உணர்வை அம்பலப்படுத்துகிறார்கள். அந்தவகையில் தந்தை வழியாட்சியின் தோற்றம் மற்றும் அது கட்டமைத்து வைத்துள்ள போலி சமூகத்தவர்களை தகர்த்திடும் கோட்பாட்டாளர்களை அடியொற்றிய பெண்எழுத்தினை இனம்காண்பதை இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## தந்தைவழியாட்சியின் தோற்றம்

தந்தைவழியாட்சி முறையானது மனித சமூகவாழ்க்கையின் குறிப்பிட்ட ஒரு காலப்பகுதியில் தோற்றம் கொண்டதாக பெரும்பாலும் அனுமானிக்கப்படுகிறது. இதன் உண்மைத்தன்மையை ஆராய வேண்டுமெனில் தந்தைவழியாட்சி சமூகத்திற்கு முற்பட்ட கருதுகோள் அளவிலான தாய்வழியாட்சி காலகட்டத்தின் சாத்தியம் பற்றி விவாதித்தல் வேண்டும்.

நாகரீகம் வளர்ச்சி பெறாத அக்காலகட்டத்தில் குழந்தைப்பிறப்பு மனிதனால் புரிந்துக்கொள்ள முடியாத படைப்பு ரீதியான சக்தியாக இருந்திருக்கும். காலப்போக்கில் குழந்தைப்பிறப்பில் பெண்ணின் வினைபாட்டை குறைத்து பிறப்பிற்கு காரணமான சக்தியாக ஆணை இடப்பெயர்வு செய்ததே தந்தைவழியாட்சியின் தோற்றமாக இருந்திருக்கும். இதனை, “ *There is some evidence that fertility cults in ancient society at some point took a turn toward patriarchy,*

*displacing and downgrading female function in procreation and attributing the power of life to the phallus alone"* [1] என்று விளக்கிடும் கேட் மில்லட், தந்தைவழியாட்சி சமூகத்தை நோக்கிய ஒரு திருப்பம் நிகழ்ந்திருக்கச் சில சான்றுகளைக் குறிப்பிடுகிறார்.

சான்று ஒன்று : ஆண்பால் கடவுளர்களின் படைத்தல்

அன்றைய காலகட்டத்தில் கருவளம் பிரதானமான கொள்கையாக, சூரியன், மழை, தாவரங்களின் வளர்ச்சி போன்றவற்றோடு தொடர்புபடுத்தப்பட்டு இயற்கை சக்தியாக அறியப்பட்டபோது பெண்தெய்வ வழிபாடு என்பது இன்றியமையாததாக இருந்திருக்கும். எனவே தந்தைவழியாட்சிமுறையின் சமயம், பெண்தெய்வங்களை அகற்றி அவற்றின் சக்தியை குறைத்து ஆண்பால் கடவுளர்ளை படைப்பதன் வழியாக தந்தைவழியாட்சியை பலப்படுத்தி இருக்க முடியும் என்கிறார் கேட் மில்லட்.

கேட் மில்லட்டின் இக்கருத்து தமிழ் சமூகத்தின் தந்தைவழியாட்சிமுறை சமயத்திற்கும் ஏற்புடையதாக உள்ளது. இங்கு பெருந்தெய்வங்களாக வணங்கப்படும் கடவுளர்கள் அனைவருமே ஆண்பால் கடவுளர்களாகவும் பெண்பால் தெய்வங்கள் ஏதாகினும் ஒருவகையில் அவர்களின் ஆளுமைக்கு உட்பட்டவர்களாகவும் கட்டமைத்திருப்பதின் வழி தந்தைவழியாட்சியை பலப்படுத்தியிருப்பதை காணமுடிகிறது.

சாகாவரம் பெற்ற மகிஷன் தனக்குப் பெண்ணால் மரணம் ஏற்படட்டும் என்று கூறியதும் சமய வழிபட்ட தந்தைவழியாட்சியின் தொடர்ச்சி தான் என்பதை அம்பை 'சோக முடிவுடன் ஒரு காதல் கதை' என்னும் கதையின் வழி இனம் காட்டி இருப்பார். "அவனுக்குத் தெரிந்து பிரம்மா, விஷ்ணு சிவன் மூவரும் அவரவர் வேலைகளுக்கு ஏற்ப மனைவிகள் வேண்டும் எனக் கேட்டபோது தோன்றியவர்கள்தானே அவர்களுடைய துணைவிகள்? எல்லாவித வேலைகளிலும் ஈடுபட்டவர்கள் ஆண்கள் தானே? பெண்கள் ஆண்களுக்குத் துணைபோகிறவர்கள் ஆண்களின் பின்னால் நடப்பவர்கள், ஆண்களை ஒட்டி நிற்பவர்கள், அதனால்தான் ஒரு பெண் யாரையும் கொல்லத் துணியமாட்டாள் என்று மகிஷன் நினைத்தான்"[2] இறுதியில் தந்தைவழியாட்சியின் இத்தகைய கற்பிதங்களை தகர்க்கும் விதமாக மகிஷன் பெண்ணால் அழிக்கப்படுவதுமாய் அம்பை கதையை நகர்த்தியிருப்பது குறிப்பிடத்தக்கது.

சான்று இரண்டு : இறையியலைக் கட்டமைத்தல்

ஆண்பால் கடவுளர்களை முதன்மைப்படுத்துவது மட்டுமின்றி அதனோடு ஒரு இறையியல் கோட்பாட்டை கட்டமைத்து அதன் ஊடாக ஆண்பாலின் உயர்வை அமைத்து தந்தைவழியாட்சி தன் இடத்தை உறுதிப்படுத்தியிருக்கும் என்கிறார் கேட் மில்லட்.

தமிழ் சமூகத்தை பொறுத்தவரையில் பெண்பால் தீமையின் குறியீடாக பக்தி இலக்கியங்களிலும் சித்தர் பாடல்களிலும் தூற்றப்பட்டுள்ளது. தந்தைவழி சமூகத்தின் மையப்பொருளான ஆணினது வீடுபேற்றை தடைச்செய்யும் பாவத்தின் இருப்பிடமாகவும், வீடுபேறு மறுக்கப்பட்டும் பெண்ணும் பெண்உடலும் சமயங்களில் அருவருக்கத்தக்கதாக விலக்கப்பட்டுள்ளது. திருவாசகப் பாடல்களிலே பெண்களின் சாகசங்கள் உலக சிற்றின்ப சூழலின் சின்னங்களென்று மாணிக்கவாசகர் குறிப்பிட்டுள்ளார். பட்டினத்தார் பெண்ணுடன் உறவு கொள்ளாமலிருப்பதே வீடுபேற்றை அடையும் வழியென தந்தைவழி சமூகத்தினை வளர்த்தெடுக்கும் இறையியலைக் கட்டமைத்துள்ளார்.

"பெண்ணாகி வந்து ஒரு மாயப்
பிசாசும் பிடித்திட்டு என்னைக்
கண்ணால் வெரைட்டி முலையால்
மயக்கிக் கடிதடத்து... ... ... "[3]

இவ்வாறாக பாவ உடலை சுமக்கும் பெண் வீடுபேற்றினை அடைய சமயங்கள் அவருக்கு கற்புநெறியை போதிக்கின்றன. அதிலிருந்து தவறிய பெண்ணை உடல்புனிதம் இழக்கப்பட்டதாகக் கூறி கொலை செய்து அவர்களை நாட்டார் பெண் சிறுதெய்வங்களாக குறுக்கி, ஆண்பால் உயர்வை தக்கவைத்திடும் முயற்சியை சமயத்தின் வழியாக தந்தைவழியாட்சி மேற்கொண்டுள்ளது.

பால்களுக்கிடையிலான சமூகத்தின் இந்துக்கள்

தந்தைவழியாட்சியின் சமூகத்தனித்துவங்களாக ஒதுக்கப்பட்டுள்ள தகுதி, மனோபாவம், பால்வகிபாவம் என்னும் கருத்தியல்களைக் கொண்டே ஆண்பால் தன்னை ஆளும்பாலாக

உருவகித்திருக்கிறது. இவை இயற்கையாகவே மனிதர்களில் இயல்பான தோற்றம் கொண்டவை என்னும் தந்தைவழியாட்சியின் கருத்தியலை பெண்ணிய கோட்பாட்டாளர்கள் மறுக்கின்றனர். இத்தகைய சமூகத்தனித்துவங்கள் ஆண்மை/பெண்மை என்று தனிமனித வேறுபாடுகளின்றி பெண்களை ஒரே வகைமாதிரிக்குள் அடக்க முயலுகின்றன என்றும் இந்த சமூகத்தனித்துவங்கள் எப்போதும் ஆணுக்கு ஆதிக்கத்தின் சலுகையை வழங்குவதாகவும் குறிப்பிடுகின்றனர்.

*தகுதி*

தகுதி என்பது சமூகத்தகுதியாகவே கொள்ளப்படுகிறது. இது கலாச்சாரத்தினை அடியொற்றிய பாரபட்சமான அரசியலின் அங்கமாக இருக்கிறது. இதனை கேட் மில்லட் ''சமூகத்தகுதி என்ற அளவில் ஆண்பால் உயர்வு பற்றிய பாரபட்சமான நிலைமை, ஆண்பாலிடம் உயர்வான தகுதியையும் பெண்பாலிடம் தாழ்வான தகுதியையும் உத்திரவாதம் செய்கிறது''[4] என்கிறார். தகுதி என்பது உயிரியல் வகைபட்டதாக அல்லாமல் கலாச்சார வகைப்பட்டதாக இருப்பதால் பால்களுக்கிடையேயான பொதுவாக புரிந்து கொள்ளப்பட்ட தனித்துவங்கள் இவற்றில் இல்லை.

*மனோபாவம்*

மனோபாவம் என்பது தந்தைவழியாட்சியின் ஆளுமை சார்ந்த ஆதிக்க உருவாக்கத்துடன் தொடர்புடையதாக இருக்கிறது. இது ஆண்பால்/பெண்பால் என்னும் உயிரியல் ரீதியான பொருளிலிருந்து மாறுபட்டு ஆண்மை/பெண்மை என்ற உளவியல் அல்லது கலாச்சார ரீதியான குறியீட்டுப் பொருட்களை ஒரே வகைமாதிரியாக பால்களின் மீது சுமத்துகிறது. கேட் மில்லட் தந்தைவழியாட்சியின் ஆதிக்க உறுப்பினர்களாகிய ஆண்கள் இவற்றை ஆதிக்கத்திற்கு உட்பட்ட பெண்கள் மீது செலுத்துவதாகக் குறிப்பிடுகிறார். ''ஆண்பாலில் ஆக்கிரமிப்பு, புத்திசாலித்தனம், வேகம், செயல்திறன் ஆகியன அடங்கும்; பெண்பாலில் அடக்கம், மடமை, பணிவு, புண்ணியம், செயல்திறமின்மை ஆகியன அடங்கும்''[5]

இத்தகைய மனோபாவம் வகைப்பட்ட ஆதிக்கத்திற்கு உட்பட்டவர்களாக ஜீஜி, ராதா பாபிஜி, குஸிமா போன்றவர்களை அடையாளப்படுத்தியிருக்கும் அதேவேளையில் அத்தகைய வகைமாதிரிகளிலிருந்து வேறுபட்டவளாக மீனாட்சியையும் அம்பை தனது 'வீட்டின் மூலையில் ஒரு சமையலறை' எனும் கதையில் படைத்திருப்பார்.

*வகிபாவம்*

மனோபாவத்திற்கு துணைநிலையாக வருவது பால்வகிபாவம் ஆகும். இது ஆண் மற்றும் பெண்பாலுக்கான உடலசைவு, மனப்பாங்கு பற்றிய நடத்தை விதிமுறையை கட்டமைக்கிறது. '' செயல்பாட்டைப் பொருத்தமட்டில் பால்வகிபாவம் பெண்பாலுக்கு வீட்டு வேலை, குழந்தை பராமரிப்பு ஆகியவற்றை ஒதுக்கீடு செய்து, ஆண்பாலுக்கு எஞ்சிய மானிட சாதனை, ஆர்வம், பெருநோக்கம் ஆகியவற்றைச் சார்த்துகிறது. பெண்பாலுக்கென வரையறுக்கப்பட்ட வகிபாவம் அவளை உயிரியல் வகைப்பட்ட அனுபவத்தளத்தோடு (மனோபாவம்) சிறைப்படுத்தும் விதத்திலுள்ளது''[6] கேட் மில்லட் இத்தகைய வகிபாவங்களில் ஆண்பாலுக்கான செயல்பாடுகள் விலங்குகளின் நடத்தை முறையிலிருந்து பெரிதும் ஒதுக்கப்பட்டிருக்கிறது என்கிறார். இதிலிருந்து குட்டிகளை ஈன்று பராமரிக்கும் விலங்குகளின் செயல்முறையை பெண்பாலுக்கான வகிபாவமாக தந்தைவழி சமூகம் கட்டமைத்திருப்பதன் பின்னணி புலனாகிறது.

இத்தகைய விலங்கியல் வகிபாவங்களிலிருந்து விடுபட்டவளாக பாமாவின் பொன்னுத்தாயி கதாபாத்திரம் தன்னை துன்புறுத்தும் கணவனிடம் ''ஒம்பிள்ளைகள நீயே வச்சுக் காப்பாத்து,... ... பெத்தவதான் பிள்ளைகள வளக்கணும்னு சட்டமா என்ன''[7] என்று தனது சுயத்தை தேடி பயணப்படுவது தந்தைவழியாட்சியின் பால்வகிபாவத்திற்கு எதிர்நிலையாக உள்ளது.

*பால் / பண்பாட்டுப்பால்*

பால் என்பது உயிரியல் வகைப்பட்ட ஆண்பால்/பெண்பால் என்பதையும் அதனோடு தொடர்புகொண்ட பாலை அடையாளப்படுத்தும் உறுப்புக்களையும் குறிக்கும். பாலியல்

என்பது மனோபாவம், வகிபாவம் போன்றவற்றை உள்ளடக்கிய உடற்கூற்றியல் மற்றும் உடற்கூற்றுச் செயல்பாட்டு இயல்பை உள்ளடக்கியதாகும். இதில் பாலியல் என்பதே பண்பாட்டுப்பால் என்ற பதத்தில் பெண்ணியக் கோட்பாட்டாளர்களால் பயன்படுத்தப்பட்டு வருகிறது. இவர்கள் பால்/பண்பாட்டுப்பால் என்னும் பதங்கள் தந்தைவழியாட்சி முறை கட்டமைத்து வைத்திருப்பது போன்று பிரிக்க முடியாதவாறு கட்டுண்டிருக்கவில்லை என்பதை உறுதிப்படுத்துகின்றனர். இதனை கேட் மில்லட் "பால் என்பதற்கு 'ஆண்' 'பெண்' என்பவை பொருத்தமானவை என்றால் பண்பாட்டுப்பாலுக்கு இணையான சொற்கள் 'ஆண்மை' 'பெண்மை' ஆகும்"8 என்று விளக்குகிறார். பெண்ணிய கோட்பாட்டாளர்கள் தந்தைவழியாட்சி குறிப்பிடுவது போல சமூகத்தனித்தன்மைகள் என்பது பிறப்பின்போதே தோன்றுவது இல்லை அவை பிறப்பின் பின்பு ஊட்டி வளர்க்கப்படும் பண்பாட்டுப்பால் அடையாளம் என்று குறிப்பிடுகின்றனர்.

ஆண்மை, பெண்மை என்னும் பதங்களில் பிறப்பின் போது ஆண் மற்றும் பெண் பால்களுக்கிடையே எந்தவித வேறுபாடும் காணப்படுவதில்லை. இதனை 'ஸ்டோல்லரின்' பண்பாட்டுப்பால் குறித்த விளக்கங்களுடன் தொடர்புபடுத்தி கேட் மில்லட் "……. இந்த நிலைநிறுத்தலுக்குக் குழந்தைக்கு ஏறத்தாழ பதினெட்டு மாதங்கள் வரை பிடிக்கும். எவ்வாறு பேச்சுக்கு முந்தைய வயதில் குழந்தைகள் கையாளப்படுகின்றன, தொடப்படுகின்றன, பாலியல் அடையாளம் அவர்களிடம் பேசப்படுகின்றன"[9] என்று பேச்சு எட்டப்படுவதற்கு முன்னமே இது கற்றறியப்படும் என்கிறார்.

இப்படியாக பண்பாட்டுப்பால் அடையாளம் ஊட்டிவளர்க்கப்படும் குழந்தை பால் அடையாளம் குறித்தும் கற்றறிதலை பெறுகிறது. "பாலிபல் அடையாளம் அவர்களிடம் பேசப்படுகின்றன. ('இது பையனா அல்லது பெண்ணா?' , 'அவள் அழகாயில்லையா?')"[10] என இதனை ஜெரோம் கஜின் விளக்கியுள்ளார். பால் அடையாளத்தை உள்வாங்கிய குழந்தை இளவயதிலேயே அதனை பெண்பால் மீது சுமத்துவதை " 'அம்மா இந்த ஆன்டி அழகா நல்லவங்களா இருக்காங்கல்லம்மா' 'எவ்வளவு சிவப்பா பொம்மையாட்டம் இருக்காங்க' 'ஐய் கை வளவளன்னு எவ்வளவு வெள்ளையா இருக்கு" இவங்களுக்கு உன்னை போல கையில முடியில்லம்மா"[11] பூ மரம் சிறுகதையில் லாவண்யா சுந்தரராஜன் பதிவு செய்திருக்கிறார்.

தந்தைவழியாட்சி ஆணுக்கும் பெண்ணுக்கும் சுமத்துகின்ற இத்தகைய பண்பாட்டுப்பால் அடையாளங்கள் ஆணை ஆக்கிரமிக்கும் செயல்களை செய்யத்தூண்டுகிறது. மாறாக பெண்ணை அவளின் வெளிகளை சிறைப்படுத்தி பண்பாட்டுப்பால் அடையாளங்களை தன்வயப்படுத்த செய்கிறது.

அம்பையின் சிறுகதையில் வரும் ரங்கா அவனின் காதலி நாணமுடையவளாக, காமத்தை அடக்குபவளாக, பெண் என்ற அம்சங்களை கொண்டவளாக இருக்க அவளை வற்புறுத்துகின்றான். எம்.ஏ.சுசீலாவின் விட்டுவிடுதலையாகி சிறுகதையில் வரும் ஆண்கள் பெண்ணை தீட்டு என்னும் பெயரால் உடலால் ஒடுக்குவதை காணமுடிகிறது. இப்படி தந்தைவழியாட்சியின் கற்பிதங்களை உள்வாங்கிய ஆண்களின் செயல்பாடுகளுக்கு பெண் எழுத்தாளர்கள் தங்கள் பெண் கதாபாத்திரங்களை தன்வயப்படுத்திக்கொள்ள செய்வது இல்லை. மாறாக அதனை தகர்க்கும் புதிய கருத்தியலை செயல்படுத்த செய்கின்றார்கள்.

முடிவுரை

தந்தைவழியாட்சி மானிட சமூக வளர்ச்சியின் இடைக்கால பகுதியில் அதற்கு முன்னிருந்த தாய்வழி சமூகஅமைப்பை பெண்தெய்வங்களை இரண்டாம் நிலைக்கு கொண்டு சென்றது மற்றும் தந்தைவழியாட்சியை உறுதிப்படுத்தும் இறையியல் கோட்பாட்டை உருவாக்கியதன் வழி இடப்பெயர்வு செய்ததை அறியமுடிகிறது. தந்தைவழியாட்சி தனது ஆதிக்கத்தை தக்கவைத்துக் கொள்ள ஆண்/பெண் இருபாலருக்கும் பௌதீக தோற்றம் கொண்டவை என்னும் பெயரில் சமூகத்தனித்துவங்களை கட்டமைத்து அதை தற்போது வரை மாறாமல் நிலைப்படுத்தி வைத்திருப்பதையும் அப்படி அவர்களால் உருவாக்கப்பட்ட சமூக தனித்துவங்கள் ஆணுக்கு ஆளும் சக்தியையும் பெண்ணுக்கு ஆட்படும் இழிநிலையையும் சூசகமாக வழங்கியிருப்பதையும் காணமுடிகிறது. அப்படி அவர்களால் உருவாக்கப்பட்ட பண்பாட்டுப்பால் அடையாளங்கள் பிறப்பின் முன்பே இயற்கையாக தோன்றியது அல்ல;

*அத்தகைய ஏற்றத்தாழ்வுகளுடன் கட்டமைக்கப்பட்ட சமூகத்தனித்துவங்களை தகர்க்கும் புதிய பெண்ணிய அணுகுமுறையாக பெண்எழுத்தாளர்களின் எழுத்துக்கள் அமைந்துள்ளது.*


*சான்றெண் விளக்கம்*

1. *Kate Millett, Sexual Politics, P.28.*
2. *அம்பை, அம்பை கதைகள் (1972-2014), பக்.723-724*
3. *ந.சுப்புரெட்டியார், பட்டினத்தடிகள், ப..86.*
4. *சாரா காம்பிள் – டோரில் போய், ராஜ் கௌதமன்(மொ.பெ), பெண்ணியம் வரலாறும் கோட்பாடுகளும், ப.49.*
5. *கேற் மில்லட், ராஜ் கௌதமன்(மொ.பெ), பாலியல் அரசியல், ப.69.*
6. *மேலது.,ப.64.*
7. *இரா.பிரேமா( தொ.ஆ), பெண்ணியக் கதைகள், ப.117.*
8. *கேற் மில்லட், ராஜ் கௌதமன்(மொ.பெ), பாலியல் அரசியல், ப.71.*
9. *மேலது.,ப.72.*
10. *மேலது.,ப.72.*
11. *லாவண்யா சுந்தரராஜன், புறாக்களை எனக்குப் பிடிப்பதில்லை, ப.104.*


********* ********* ********** ********* ********* ********** ********** **********